தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.03.2013 A.M**

---

## நாளை மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி முகாம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சார்பில் மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் வியாழக்கிழமை (மார்ச் 14) நடைபெறுகிறது.

இது குறித்து பயிற்சி மையத்தினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

வீடுகளின் பின்பகுதியில் உள்ள காலி இடங்கள் குறைவாகவோ அல்லது இடப்பற்றாக்குறை இருந்தால் வீட்டிலுள்ள மாடிப் பகுதியில் காய்கறி மற்றும் மூலிகைப் பயிர்களை வளர்க்கலாம். இத்தோட்டங்களை எளிதாக வளர்க்க முடியும்.

இதுபோல் தோட்டங்களை வளர்க்க ஒரு நாள் பயிற்சி முகாம், எண்.யு-30, 10ஆவது தெரு, அண்ணா நகர் என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறுகிறது.

இதில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் 26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துக் கொள்ளலாம். இதில் பங்கேற்பவருக்கு பயிற்சி பற்றிய குறிப்பேடு, கையேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்

பால் கொள்முதல் விலையை அரசு ரூ.25 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்று புதுச்சேரி பால் உற்பத்தியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதுச்சேரி பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் முதல் மாநில மாநாடு தருமராஜா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாநாட்டுக்கு சங்கத்தின் தலைவர் சு.ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஆர்.விசுவநாதன் மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார்.

தீர்மானங்கள்:

கால்நடைத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வந்த மானிய விலை தீவனத் திட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும்.

கால்நடைத் துறையில் காலியாக உள்ள டாக்டர்கள் மற்றும் உதவியாளர் பணியிடங்களை புதுச்சேரியைச் சேர்ந்தவர்களை கொண்டு நிரப்ப வேண்டும்.

விலையில்லா பசு மாடுகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும்.பால் கொள்முதல் விலை ரூ.25 ஆக அரசு உயர்த்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ரா.சிவா, தொழிற்சங்கத்தின் மாநிலத் தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான நாரா.கலைநாதன், பொதுச் செயலர் வி.எஸ்.அபிஷேகம் உள்ளிட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரத்தில் மார்ச் 15 விவசாயிகள் குறை தீர் கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் அவரது அலுவலகத்தில் மார்ச் 15 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் காலை 11.30 மணி அளவில் நடைபெறுகிறது.

இதில் விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த பொருள்கள் குறித்து விவாதிக்குமாறு ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க இந்திய கம்யூ. வலியுறுத்தல்

பரமக்குடி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதற்கு நகர் செயலர் என்.எஸ்.பெருமாள் தலைமை வகித்தார். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஞா.காசி, கே.சுப்பிரமணியன், எஸ்.பி.ராதா, கே.ஜீவா, ஆர்.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஜெ.லெட்சுமணன் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலர் என்.கே.ராஜன் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

கூட்டத்தில், இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியான இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழக மீனவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருப்பதை வன்மையாக் கண்டிப்பதுடன், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து சுட்டுக்கொல்வதை மத்திய அரசு தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.வறட்சியால் பாதிக்கப்பட்ட ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு உடனே நிவாரணம் வழங்கிடவும், மதுரைக்கு கூடுதல் ரயிலும், கோயம்புத்தூர்-ராமேசுவரத்துக்கு தினசரி ரயிலும் இயக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.ஆர்.கலைமணி, ராமசுந்தரம், பி.ராஜேந்திரன், முருகானந்தம், காளிதாஸ், மாதர் சம்மேளனம் சார்பில் நவராணி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 38.40 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 539 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்து விடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.21 டி.எம்.சி.

## 22-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 22-ம் தேதி விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெறுகிறது.

15-ம் தேதி நடைபெறவிருந்த இந்த கூட்டம், நிர்வாக காரணங்களுக்காக 22-ம் தேதி காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## 1,800 ஏக்கரில் மிளகாய் சாகுபடி பாதிப்பு

ஓட்டப்பிடாரம் வட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால், 1,800 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கடந்த ஆண்டில் வடகிழக்குப் பருவமழை பொய்த்து போனது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி சாகுபடி அதிகம் நடைபெறும் இடங்களான ஓட்டப்பிடாரம், எட்டயபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர் ஆகிய பகுதிகளில் பருவமழையை எதிர்கொண்டு சூரியகாந்தி, எள், சோளம், தீவனச்சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, துவரை, கொத்தமல்லி, மிளகாய் போன்றவற்றை விவசாயிகள் பயிர் செய்திருந்தனர்.ஆனால், பயிர்கள் அனைத்தும் முளைக்கும் தருவாயில் இருந்து பூ மற்றும் காய்கள் பிடிக்கும் தருவாய்வரை எதிர்பார்த்த பருவமழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட்டுவிட்டன.


இம் மாவட்டத்தில், 10 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஓட்டப்பிடாரம் வட்டத்தில் மட்டும் 1,800 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயிர்கள் தொடர்மழை இல்லாததால் ஒரு அடி உயரம் கூட வளரவில்லை. சிறிய செடிகளாகக் காட்சித் தருகின்றன. அதில் குறைந்த அளவிலான காய்களே விளைந்துள்ளன.

பெரும்பாலான செடிகளில் பூக்கள் உதிர்ந்து காய்கள் பிடிக்காமல் செடிகளாக இருக்கின்றன. இப்போது வெயில் கடுமையாக நிலவி வருவதால் செடிகள் வாடிய நிலையில் காணப்படுகின்றன.

கரிசல் நிலமும் வெயிலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் வெடிப்புகள் நிறைந்து காணப்படுகிறது. பல ஆயிரம் செலவு செய்தும் விவசாயப் பயிர்கள் கைகொடுக்காததால் விரக்தியடைந்துள்ள விவசாயிகள் அரசு உதவியை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

## வெள்ளரிக்காயும், முலாம் பழமும் இந்தியாவில் தோன்றியவை



வெள்ளரிக்காயும், முலாம் பழமும் இந்தியாவில்தான் தோன்றின என்று ஜெர்மனி நாட்டு தாவரவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

இமயமலை அடிவாரப் பகுதியில் தோன்றிய இவை இரண்டும், கங்கை நதிக்கரையில் பயிரிடப்பட்டுள்ளன. இவை இரண்டுமே குகுர்பிடேஸ்சியே தாவர இனத்தைச் சேர்ந்தவை.

ஜெர்மனியின் மியூனிச் பல்கலைக்கழக தாவரவியல், மண்ணியல் துறை அறிஞர் சூசன் ரீன்னர், தில்லி பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையைச் சேர்ந்த அருண் பாண்டே ஆகியோர் இது தொடர்பாகக் கூறியிருப்பது: மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு காய்கறிகளை சாப்பிடுவது மிகவும் அவசியமானது.

காய்கறிகள் எப்பகுதியில் தோன்றியிருந்தாலும், எந்தவிதமான கால நிலையில் பயிரிடப்படும் தன்மை வாய்ந்தது என்றாலும், உலகம் முழுவதும் உள்ள மனிதர்களுக்கு காய்கறிகளில் உள்ள சத்துகள் அவசியம்.

இந்தியாவில் பெரிதும் உண்ணப்படும் வெள்ளரிக்காய், தர்பூசணி, சுரைக்காய், முலாம் பழம் உள்ளிட்டவை குகுர்பிடேசியே தாவர இனத்தைச் சேர்ந்தவைதான்.

இதில் வெள்ளரிக்காயும், முலாம் பழமும் முதலில் இந்தியாவில் தோன்றிதான் பிற நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இவை தவிர மொத்தமுள்ள 94 விதமான வாசனைப் பொருள்களில் 10 பொருள்கள் இந்தியாவில்தான் தோன்றின. டிஎன்ஏ பரிசோதனைகள் மூலம் இவை உறுதி செய்யப்பட்டுள்ளன என்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.03.2013 A.M**

---

## ஒரு கிலோ பொன்னி நெல் விலை ரூ.32:தமிழக அரிசி விலை உயரவில்லை

தேனி:தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில் நெல் அறுவடை பணிகள் முடிந்துள்ளதால், கர்நாடகா சந்தையில் ஒரு கிலோ பொன்னி நெல்,கிலோ 32 ரூபாயாக உயர்ந்துள்ளது. தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மூன்று மாநிலங்களிலும் நெல் அறுவடை பணிகள் முடிந்து விட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகாவில், ""ஸ்டீம் ரைஸ்'' மில்கள் தொடங்கப்பட்டன. இந்த மில்கள் ஒரே நேரத்தில், பல்லாயிரம் நெல் மூடைகளை அரிசியாக்கும் திறன் கொண்டவை. இதனால் குறைந்த விலைக்கு பொன்னி அரிசியை விற்ற கர்நாடகா அரிசி வியாபாரிகள், மக்கள் இந்த அரிசியை சாப்பிட்டு பழகியதும், விலையை ஏற்றி சம்பாதித்து வருகின்றனர்.

தமிழகம், ஆந்திராவை விட, கர்நாடகாவில் மூன்று மடங்கு அதிக எண்ணிக்கையில் அரிசி ஆலைகள் உள்ளன. இதனால் இந்த மூன்று மாநிலங்களிலும் அறுவடையாகும் நெல்லில் பெரும் பகுதியை கர்நாடகா வியாபாரிகளே கொள்முதல் செய்கின்றனர். அரிசியாக்கி அந்தந்த மாநிலங்களுக்கே அனுப்பி விற்பனை செய்கின்றனர். தற்போது தஞ்சாவூர் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் பொன்னி நெல் கொள்முதல் செய்தனர். இப்பகுதிகளில் புதிய நெல் கிலோ 26 ரூபாய் வரை, கொள்முதல் செய்து கர்நாடகா கொண்டு சென்றனர். தற்போதும், இப்பகுதிகளில் நெல் விலையில் இதே நிலை நீடிக்கிறது. ஆனால், கர்நாடகாவில் நெல் விலை கிலோ 32 ரூபாயாக உயர்ந்துள்ளது.தற்போது, ராஜபோகம் அரிசி கிலோ 52.80 ரூபாய்க்கும், 2ம் ரகம் 48 ரூபாய்க்கும், கர்நாடகா பொன்னி புதுசு 37 முதல் 46க்கும், விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி கிலோ 42, கல்சர் 35, புதுசு கல்சர் 30, இட்லி அரிசி 25 முதல் 35க்கும் விற்கப்படுகிறது.

ஒட்டு செல்லப்பொன்னி புதுசு 31,நான்கு மாத பழையது 36, சாதாரண பிரியாணி அரிசி 70, சீரக சம்பா பிரியாணி அரிசி 80, பாசுமதி அரிசி 90 முதல் 150 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அரிசி வியாபாரிகள் கூறியதாவது: விளைச்சல் குறைவால் கர்நாடகாவில் இருந்து

இறக்குமதியாகும் அரிசி விலை சற்று அதிகரித்துள்ளது. தமிழகத்தில் விளைந்து, இங்குள்ள மில்களில் தயாரிக்கப்பட்ட தரமான அரிசி கிலோ 25 ரூபாய்க்கு இன்னமும் தாராளமாக கிடைக்கிறது.

கர்நாடகா சோனா ரகத்தை சேர்ந்த பொன்னி நெல் பழையது கிலோ 32 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே ரகம் நான்கு மாத பழைய நெல், கிலோ 24 ரூபாய்க்கு விற்கிறது. தமிழகத்தை சேர்ந்த ஒட்டு செல்லப்பொன்னி நெல் கிலோ 14.35 ரூபாய்க்கும், எல்.எல்.ஆர்., ரகம் 16.50 ரூபாய்க்கும், டீலக்ஸ் பொன்னி 20.50க்கும் விற்கப்படுகிறது. இதனால், தமிழகத்தில் விளையும் நெல் மற்றும் அதில் உற்பத்தியாகும் அரிசி விலை சந்தையில் குறைவாகவே உள்ளது. மக்கள் கர்நாடகா தயாரிப்புகளை வாங்குவதை குறைத்துக் கொண்டு, விலை குறைந்த தமிழக தயாரிப்புகளை வாங்கினால் சந்தையில், கர்நாடகா அரிசி விலையும் குறைவதை தவிர வேறு வழியில்லை. கர்நாடகா பொன்னி மாயையில் இருந்து மக்கள் விடுபட்டாலே, விலை குறைந்து விடும்,என்றனர்.

### விளைநிலங்களில் வளர்ந்தபார்த்தீனிய செடிகள்

தேவதானப்பட்டி:வறட்சி ஏற்பட்டுள்ளதால், ஜெயமங்கலம் பகுதி விளைநிலங்களில் பார்த்தீனிய செடிகள் வளர்ந்துள்ளன. மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், ஆறுகளில் நீர்வரத்து இல்லை. இதனை நீர் ஆதாரமாக கொண்ட கண்மாய்கள் வறண்டுள்ளன. இதானல், விவசாயிகள் முதல் போக நெல் சாகுபடியை தவிர்த்துள்ளனர்.

கிணற்றுப்பாசன விவாயிகளும் விவசாயப்பணிகளை தவிர்த்துள்ளதால், தரிசாக கிடக்கும் நிலங்களில் மனிதனுக்கு சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் பார்த்தீனிய செடிகள் வளர்ந்துள்ளன. இந்த செடிகள் மனிதனின் உடலில் பட்டால் அரிப்பு ஏற்படும், தோல் தடிமனாக மாறிவிடும். காற்றினால் பரவும் இதன் பூக்கள் உடலில் ஒட்டுவதால் சுவாசக் கோளாறு ஏற்படும்.விளை நிலங்கள் பாதிக்கப்படும். பெரியகுளம் ஒன்றியம்,ö ஜயமங்கலத்தில் தரிசாக கிடக்கும் நிலங்களில், பார்த்தீனிய செடிகள் அதிகமாக வளர்ந்துள்ளன. இதே போன்று மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலும், பார்த்தீனிய செடிகள் வளர்ந்தள்ளன. இவைகளை அகற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பருத்தி சாகுபடி பயிற்சி

விருதுநகர்: விருதுநகர் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில், பருத்தி சாகுபடி தொழில் நுட்பம் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் செண்பகராஜ், ""பருத்தி உயர் விளைச்சல் ரகங்கள், தரமான விதைகளை பயன்படுத்தி, முறையான பயிர் பாதுகாப்பு செய்தால் விளைச்சல் அதிகரிக்கலாம்," என்றார். வேளாண் துணை அலுவலர் பாலசுப்பிரமணியன்,""பருத்தியில் பரிந்துரைக்கப்பட்ட விதையளவு, விதை நேர்த்தி செய்தால், உரிய பயிர் இடைவெளியில் செடிகளை பராமரித்தால், சாறு உறிஞ்சும் பூச்சிகளையும், பருத்தி காய்புழுக்களையும் கட்டுப்படுத்தலாம்," என்றார். வேளாண் அலுவலர் சுந்தரவள்ளி,"" மண்பரிசோதனை செய்து உரமிடுவதால், உரச்செலவு குறைவதோடு மண் வளம் பாதுகாக்கப்படும்," என்றார். விவசாயிகளுக்கு களைக்கட்டுப்பாடு குறித்து விளக்கமளிக்கப்பட்டது

## பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் விழிப்புணர்வு கூட்டம் கரிவலம்வந்தநல்லூர் பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் நடந்தது

திருவேங்கடம்:பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் விழிப்புணர்வு கூட்டம் கரிவலம்வந்தநல்லூர் பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் நடந்தது. சிவகிரி தொழில்நுட்ப சேவை மைய அளவிலான பட்டுப்புழுவளர்ப்பு விழிப்புணர்வு கூட்டத்திற்கு கரிவலம்வந்தநல்லூர் பஞ்.,தலைவர் பால்ராஜ் தலைமை வகித்தார். சிவகிரி உதவி ஆய்வாளர் சங்கரன் வரவேற்று பேசினார். முன்னோடி விவசாயி முருகன் பட்டுவளர்ப்பில் ஏக்கருக்கு வருடத்திற்கு ரூபாய் மூன்று லட்சம் வருமானம் ஈட்டும் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மத்திய பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மைய தொழில்நுட்ப அலுவலர் தங்கவேல் நவீன தொழில்நுட்பங்கள் பற்றி பேசினார். புதுவாழ்வு திட்டம் முருகன் குழுக்கள் மூலம் அரசு உதவிகள் பெற்று பட்டு விவசாயம் செய்து முன்னேற வழிகள் பற்றி பேசினார். உதவி இயக்குநர் வெற்றிவேல் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் பட்டுவளர்ப்பு விவசாயிகள் பொருளாளாதார மேம்பாடு அடைவது பற்றி பேசினார். இளநிலை ஆய்வாளர் ராமசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## கார் சாகுபடி இல்லாததால் 10 லட்சம் குவிண்டால் நெல் பாதிப்பு:விவசாயிகளுக்கு ரூ. 130 கோடி இழப்பு நதிநீர் பாதுகாப்பு பேரவை அதிர்ச்சி தகவல்

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் கார் நெல் சாகுபடி நடக்காததால் மொத்தம் 10 லட்சம் குவிண்டால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு 130 கோடி ரூபாய்

இழப்பு ஏற்பட்டிருப்பதாக கலெக்டரிடம் நதிநீர் பாதுகாப்பு பேரவை சார்பில் அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.தூத்துக்குடி மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தாலும், பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளில் இருந்து கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டதால் விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டது. வறட்சி மாவட்டமாக இம் மாவட்டத்தை அரசு அறிவித்தாலும் இன்னும் அரசின் உயர்மட்டக்குழு வந்து பார்வையிடவில்லை. இதனால் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்குமா என்கிற சந்தேகம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.இந் நிலையில் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை சார்பில் மக்கள் குறைதீர்க்கும் நாளில் கலெக்டரிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறப்பட்டிருப்பதாவது;தூத்துக்குடி மாவட்ட தாமிபரணி பாசனத்தில் மருதூர் அணை, ஸ்ரீவைகுண்டம் அணை ஆகிய அணைகள் மூலமாக 46 ஆயிரத்து 107 ஏக்கர் கார், அட்வான்ஸ் கார், பிசானம் ஆகிய மூன்று சாகுபடி உரிமை பெற்றவையாகும்.இம் மாவட்டத்தில் தாமிரபரணி பாசனத்தில் கடந்த 20 ஆண்டுகளாக கார் சாகுபடிக்கு அனுமதியும் தண்ணீரும் வழங்கப்படவில்லை. 2012-2013ம் பாசன ஆண்டிற்கு ஜூன் மாதம் 15ம் தேதி ஆரம்பிக்கப்பட வேண்டிய கார் சாகுபடிக்கு அனுமதி மற்றும் தண்ணீர் வழங்கப்படவில்லை. இதனால் கார்சாகுபடி நடக்கவில்லை.கார்சாகுபடி நடக்காத காரணத்தால் சுமார் 10 லட்சம் குவிண்டால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு சுமார் 130 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும்.விவசாயிகளுக்கான நிலவரி மற்றும் அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகள் மீண்டும் கார் சாகுபடியை ஆரம்பிக்க உடனடியாக அவர்களுக்கு பயிர்கடன் வழங்க வேண்டும்.விவசாயிகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து தொழிற்சாலைகளுக்கு 20 எம்.ஜி.டி திட்டத்தில் தண்ணீர் எடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.நடப்பாண்டில் அட்வான்ஸ் கார்சாகுபடிக்கு வரும் 25ம் தேதிக்குள் அறிவிப்பு செய்து அனுமதி வழங்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

### மஞ்சள் பதப்படுத்தும் பணி தீவிரம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் மஞ்சள் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. நிலத்தில் இருந்து தோண்டியெடுத்த மஞ்சளை நீராவி மூலம் பதப்படுத்தும் பணி மும்பரமாக நடந்து வருகிறது.

சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் மஞ்சள் அதிகமாக பயிரிட்டுள்ளனர். கடந்த ஆண்டுக்கு முன் மஞ்சள் விலை அதிகரித்தது. ஆனால் கடந்த ஆண்டு மஞ்சள் விலையில் பெரிய சரிவு ஏற்பட்டது. இதனால் மஞ்சள் பயரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால் கடந்த இரண்டு ஆண்டுக்கு முன் மஞ்சள் பயிரிடும் அளவில் இருந்து, 40 சதவீதம் நடப்பு ஆண்டில் குறைந்தது.

இந்நிலையில் தற்போது மஞ்சள் அறுவடை நேரம் தொடங்கியுள்ளது. விவசாயிகள் தங்கள் நிலத்தில் பயிரிட்டிருந்த மஞ்சளை, நிலத்தில் இருந்து தோண்டியெடுத்து, மஞ்சளை நீராவி மூலம் பதப்படுத்தும் பணியை செய்து வருகின்றனர்.

இந்த மஞ்சளை பதப்படுத்தியபின் வெயிலில் உலர வைக்க வேண்டும். பின் காய்ந்த மஞ்சளை இயந்திரத்தின் மூலம் குலுக்கி, பாலிஷ் செய்த பின் விற்பனைக்காக கொண்டு செல்வர்.

## துல்லிய பண்ணை திட்டம் விவசாயிகளுக்கு பயிற்சி

கரூர்: துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் தாந்தோணியில் அருகே மூக்காணங்குறிச்சியில் நடந்தது. தமிழகத்தில் தேசிய வேளாண் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியோடு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் கரூர் மாவட்டத்தில் துல்லிய பண்ணைத் திட்டம் கீழ், தாந்தோணியில் உள்ள மூக்காணங்குறிச்சி, 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி முகாமை தோட்டக்கலை இயக்குனர் சதாசிவம் துவக்கிவைத்தார். வட்டரா தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம், துல்லிய பண்ணைத்திட்டத்தில் தொழில்நுட்பம் குறித்து பேசினார். இத்திட்டத்தில் நுண்ணீர் பாசன அமைப்பு, வயல்பராமரிப்பு பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டது. இதன் மூலம் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி திறனை, இரண்டு மடங்கு உயர்த்தி, விவசாயிகள் வருமானத்தை, இரண்டு மடங்கு உயர்த்த திட்டமிடப்பட்டது. முகாமில் துணை அலுவலர் ஜானகி, உதவி வேளாண் அலுவலர்கள் லெனில், திருப்பதி உட்பட பலர் பங்கேற்றனர்.

## பாசுமதி ரக நெல்லை பயிரிட முயற்சி

காஞ்சிபுரம்;பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலத்தில் மட்டும் விளைவிக்கப்பட்ட பாசுமதி நெல் ரகத்தை, தமிழகத்தில் விளைவிக்க தேவையான முயற்சியை, வேளாண் துறை மேற்கொண்டு உள்ளது.

தமிழகத்தில் தற்போது சன்னரக அரிசி மற்றும் குண்டு ரக நெல் மட்டும் பயிரிடப்படுகிறது. சன்னகர அரிசி சாதத்திற்கும், குண்டு ரக அரிசி இட்லி மாவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. சமீப

காலமாக மக்களிடம், பிரியாணி மோகம் அதிகரித்து வருகிறது. பிரியாணிக்கு பாசுமதி அரிசி அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

பிரியாணி பிரியர்கள் விரும்பும் பாசுமதி அரிசி, பஞ்சாப், அரியானா, இமாச்சலப் பிரதேசம் மாநிலத்தில் மட்டும் பயிரிடப்பட்டு வந்தது. அங்கு பாசுமதி பெர்மல், பாசுமதி சர்பதி, ஆகிய வகை நெல் மட்டும் விளைவிக்கப்படுகிறது.

புதிய ரகம்

இந்த ரக நெல், குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டும் விளையும். பிற மாநிலங்களில் விளைவதற்கேற்ற சீதோஷ்ண நிலை இல்லை. இதனால், பாசுமதி ரக அரிசிக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது.

இச்சூழலில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், புதிதாக பாசுமதி-1121 ரக நெல்லை கண்டுபிடித்து, விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தியது. இப்புதிய ரக நெல், எத்தகைய சூழ்நிலையிலும் வளரும் தன்மை கொண்டது.

இதற்கு குறைந்த தண்ணீர், குறைவான உரம் போதுமானது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டது. இந்நெல் பயிரிட்டால், ஏக்கருக்கு 50 முதல் 55 மூட்டை நெல் கிடைக்கிறது. ஒரு கிலோ நெல் தற்போது, 37 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதை அறிந்த பிற மாநில விவசாயிகளும், புதிய பாசுமதி ரக நெல்லை பயிரிடத் துவங்கி உள்ளனர். இதனால், பாசுமதி நெல் உற்பத்தி அதிகரித்து உள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரிகள் கூறுகையில், ""பாசுமதி நெல்லை தமிழகத்தில் பயிரிடுவது குறித்து, ஆராய்ச்சி நடந்து வருகிறது. விரைவில் தமிழகத்தில் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்படும்," என்றனர்.

இதுகுறித்து, காஞ்சிபுரத்தை சேர்ந்த, நெல் வியாபாரி முனுசாமி கூறியதாவது: புதிய பாசுமதி-1121 ரக நெல், எந்த சூழ்நிலையிலும் வளரும் தன்மை கொண்டது. தற்போது பஞ்சாப், அரியானா மாநிலங்களில் மட்டுமின்றி, உத்தரப்பிரதேசம், உத்திரகாண்ட், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், பீகார், போன்ற மாநிலங்களில் பயிரிடப்படுகிறது. இதை தமிழகத்திலும் பயிரிடலாம். இந்நெல்லை, தற்போதுள்ள நவீன அரிசி ஆலைகளிலே அரைக்க முடியும். எனவே, தாராளமாக தமிழக விவசாயிகள் பயிரிடலாம்," என்றார்.

## "ராமேஸ்வரம் மல்லி செடி' விற்பனை அமோகம்

காஞ்சிபுரம்:விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், "ராமேஸ்வரம் மல்லி செடி' விற்பனை, அமோகமாக நடந்து

வருகிறது.

காஞ்சிபுரம் அடுத்த களக்காட்டூர் ஊராட்சிக்குட்பட்டது விச்சந்தாங்கல். இங்கு, 58 ஏக்கர் பரப்பளவில், அரசு தோட்டக்கலைப் பண்ணை உள்ளது. இப்பண்ணையில் மல்லி, கொய்யா, ரோஜா, கனகாம்பரம், தேக்கு, வேம்பு, குல்முகார், வாகை உள்ளிட்ட செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தோட்டக்கலை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர், தினக் கூலி தொழிலாளர்கள் என, 12 பேர் பணிபுரிகின்றனர்.

அதிக மகசூல்

கடந்த ஆண்டு, வடக்கிழக்கு பருவ மழையின்போது, 2 லட்சத்து 25 ஆயிரம் ராமேஸ்வரம் மல்லி செடிகள், பதியம் போடப்பட்டது. இவை கடந்த மாதம், விற்பனைக்கு தயாரானது. விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானிய விலையிலும், பொது மக்களுக்கு ஒரு செடி, 7 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு மல்லிபோல் வாசனை கொண்டது. நிலத்தில் நடவு செய்த ஆறாவது மாதத்தில், பூக்க துவங்கும். ஒவ்வொரு ஆண்டும், 9 மாதம் வரை பூக்கும் தன்மை கொண்டது. கனகாம்பரம் போல், இப்பூக்களின் எடை குறைவாக இருப்பதால், ஒரு கிலோ 200 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை விற்கலாம்.

ஒவ்வொரு ஆண்டும் களை எடுத்து, தொழு உரமிட்டு, நன்கு பராமரித்தால், செடி 15 ஆண்டுகள் வரை பூக்கும்.

விவசாயிகள் ஆர்வம்

ராமேஸ்வரம் மல்லி செடி விற்பனை துவங்கிய, ஒரே மாதத்தில் ஒரு லட்சத்து 42 ஆயிரம் செடிகள் விற்பனை ஆகியுள்ளன. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். பண்ணையில் தற்போது, 83 ஆயிரம் மல்லி செடிகள், விற்பனைக்கு தயாராக உள்ளன.

## காட்டு பன்றிகளால் 1,000 ஏக்கர் பயிர்கள்...கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் திணறல்

ஆர்.கே.பேட்டை:மாவட்டத்தில், ஐந்து ஊராட்சிகளில், 150க்கும் மேற்பட்ட காட்டுப் பன்றிகளால், 1000 ஏக்கர் விளை நிலங்கள் நாசமாகி உள்ளன. அவற்றை கட்டுப்படுத்த, விவசாயிகள் திணறி வருகின்றனர்.

ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில் தாமனேரி, வீரமங்கலம், மகான்காளிகாபுரம், விடியங்காடு, ஸ்ரீகாளிகாபுரம் ஆகிய ஐந்து ஊராட்சிகள் உள்ளன. இவற்றிற்கு உட்பட்டு, ரங்காபுரம், பந்திகுப்பம், சேதுவராகபுரம், வீரகோவில்மோட்டூர், பாலாபுரம் உள்ளிட்ட 15 கிராமங்கள் உள்ளன.

இவை அனைத்தும் வீரமங்கலம் மற்றும் பெரியநாபூடி காப்பு காடு பகுதியை ஒட்டி

அமைந்துள்ளன. இந்த பகுதியில் காட்டுப பன்றிகள் வசிக்கும் குன்றுகளும் அமைந்து உள்ளன. காப்பு காடு பகுதியை சுற்றிலும் கரும்பு, நெல், வேர்க்கடலை உள்ளிட்டவை 3,000 ஏக்கரில் பயிர் செய்யப்படுகின்றன. இது தவிர, கத்தரிக்காய், முள்ளங்கி, மக்காச்சோளம், வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறி வகைகள் 1,000 ஏக்கரில் பயிரிடப்படுகின்றன.

இரவில் ஆட்டம்

நெல், கரும்பு மற்றும் கிழங்கு வகைகள் காட்டு பன்றிகளுக்கு விருப்பமான உணவு வகைகள். காப்பு காடுகளில் ஏறத்தாழ 150 காட்டு பன்றிகள் இருப்பதாக கூறப்படுகிறது. பகலில் காட்டுக்குள் பதுங்கி இருக்கும், இவை, இரவு எட்டு மணிக்கு மேல் விவசாய நிலங்களில் இறங்கி கிழங்குகளை தோண்டுவதும், நெல் மற்றும் கரும்பு பயிர்களை ருசிப்பதும் வாடிக்கையாகி விட்டது.

சாப்பிடுவதோடு விடாமல், உணவு கிடைத்த மகிழ்ச்சியில், அதே வயலில் உருண்டு புரள்கின்றன. இதனால் பயிர்கள் முழுவதுமாக சேதமாகின்றன. காட்டு பன்றிகளுக்கு சேற்றில் புரள்வது மிகவும் பிடிக்கும். நீர் நிரம்பிய நடவு வயல்களில் படுத்து உருளுகின்றன. இதனால் இளம்பயிர்களும் நாசமாகின்றன. இந்த வகையில், இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்து மட்டும் 1,000 ஏக்கர் பயிர்கள் நாசமாகி உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தூக்கம் போச்சு

பன்றிகளை விரட்டுவதற்காக, விவசாயிகள், இரவு முழுவதும் கண் விழித்து, சத்தம் எழுப்பியபடி வயல்களில் வலம் வருகின்றனர். இந்த பணியில் சற்று நேரம் கண் அசந்தாலும், மூன்று மாதமாக வளர்ந்த பயிர் ஒரே நாளில் நாசமாகிவிடும் என்கின்றனர், இந்த பகுதி விவசாயிகள். தினமும் இரவில் கண்விழித்து சிரமப்படும் விவசாயிகள், தற்போது, நூதன முறையில் துணி வேலி அமைத்து, பன்றிகளை கட்டுப்படுத்தி வருகின்றனர். பழைய வேட்டி, சேலைகளை கிழத்து கொடி போன்று கட்டி வைக்கின்றனர். துணியை தூரத்தில் இருந்து பார்க்கும் காட்டுப் பன்றிகள், மனிதர்கள் நடமாட்டம் உள்ளதாக நினைத்து அருகில் வருவதில்லை. இது இளம் பயிர்களை காப்பாற்ற மட்டுமே உதவுகிறது. பசி அதிகமானால், விளைந்த பயிர்களை பன்றிகள் சாப்பிடாமல் விடுவதில்லை.

வயலுக்கு தீ!

காட்டு பன்றிகளால் பாதிக்கப்பட்ட பந்திக்குப்பம் விவசாயி, செல்வகுமார் கூறுகையில், ""கடந்த ஆண்டு மூன்று ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிட்டு இருந்தேன். அறுவடை நேரத்தில் காட்டுப் பன்றிகள், பயிர்களை நாசம் செய்ததால், பலத்த சேதம் ஏற்பட்டது," என்றார். மேலும், ""சேதம் அடைந்தது போக மிச்சம் இருந்த பயிரை அறுவடை செய்தால், கூலி கூட கிடைக்காது என்பதால், பயிரை தீ வைத்து கொளுத்தி விட்டேன். வன துறையினர் நடவடிக்கை எடுத்து காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த வேண்டும்," என்றார்.

இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வன துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், ""கடந்த ஆண்டு காட்டு பன்றிகளால் சேதம் அடைந்த விவசாயிகளுக்கு, 5 லட்சம் ரூபாய் நஷ்ட

ஈடு வழங்கப்பட்டது. காட்டு பன்றிகள் முற்றிலும் அழிப்பது என்பது சிரமமான காரியம். அவைகள் வயல்வெளியில் வராமல் தடுக்க அகழி வெட்ட வேண்டும். இதற்கு, அரசு போதிய நிதி ஒதுக்கினால், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்," என்றார்.

## கடும் வறட்சியால் கருகும் மாமரங்கள் மாம்பிஞ்சுகள் வெம்பி உதிர்வதால் சோகம்

நங்கவள்ளி: நங்கவள்ளி சுற்றுப்பகுதியில் வறட்சி காரணமாக மாமரங்களில் பிஞ்சுகள் வெம்பி உதிர்வது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.
சேலம் மாவட்டத்தில், 7,000 ஏக்கரில் விவசாயிகள் மா சாகுபடி செய்துள்ளனர். இதில், நங்கவள்ளி வட்டாரத்தில் 1,400 ஏக்கர், மேச்சேரி வட்டாரத்தில், 700 ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், நீலம், பெங்களூரா, மல்கோவா, அல்போன்ஸா, இமாம்பசந்த், பங்கனபள்ளி ரக மரங்களே அதிகம்.
ஆண்டுதோறும் மார்கழி, தை மாதம் மாமரங்களில் பூக்கள் பூக்கும். மாசி, பங்குனி மாதத்தில் காய்கள் காய்த்து அறுவடைக்கு தயாராகி விடும். நடப்பாண்டு கடந்த ஜனவரி மாதம் அதிக குளிரும், மிதமான வெயிலும் இருந்ததால் மாமரங்களில் பூக்கள் பூத்து குலுங்கியது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.
ஆனால், தென்மேற்கு பருவமழை தவறியதால், நங்கவள்ளி, மேச்சேரி பகுதியில், இரு மாதங்களாக கடும் வறட்சி நிலவுகிறது. வெயிலுக்கும், வறட்சிக்கும் தாக்கு பிடிக்க முடியாமல், மாமரங்கள் கருக துவங்கியுள்ளது. மாமரங்களில் காய்த்த பிஞ்சுகளும் வெயிலுக்கு தாக்கு பிடிக்க முடியாமல் மரத்திலேயே வெம்பி உதிர துவங்கியுள்ளது.
ஒவ்வொரு நாளும் மாமரத்தின் கீழ் உள்ள பிஞ்சுகளை அகற்றிய போதிலும், அடுத்த நாளே ஏராளமான பிஞ்சுகள் உதிர்ந்து கிடப்பது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியது. இதனால், நடப்பாண்டு மாங்காய் உற்பத்தி குறையும் என்பதால், விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. விலை உயர்ந்தபோதிலும், மாமரங்களில் எதிர்பார்த்த அளவுக்கு காய்கள் உற்பத்தியாகாத நிலையில், நஷ்டம் ஏற்படும் என்பதால் நங்கவள்ளி, மேச்சேரி சுற்றுப்பகுதியில் மா விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

## நிலக்கடலை வரத்து குறைந்ததால் மூட்டைக்கு ரூ. 316 விலை உயர்வு

சேலம்: இரண்டாம் கட்ட சீஸனில், நிலக்கடலை வரத்து குறைவாக இருந்தாலும், மூட்டைக்கு, 316 ரூபாய் விலை அதிகரித்துள்ளது.
சில மாதங்களாக நிலக்கடலைக்கு உரிய விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிலக்கடலை சீஸனாக உள்ளது. அப்போது அதிகளவு நிலக்கடலை அறுவடை இருக்கும். சீஸன் நேரத்தில் நிலக்கடலைக்கு அதிக விலை கிடைத்தது. தற்போது நிலக்கடலை அறுவடையின் இரண்டாவது

சீஸன் துவங்கி ஒரு மாதமாகிறது.
சேலம், பள்ளப்பட்டியில் உள்ள சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நிலக்கடலை, மஞ்சள் ஏலம் தினமும் நடந்து வருகிறது. சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, ஓமலூர், பசுவனத்தம்பட்டி, மயிலாபாளையம், வேலம்பாளையம், மேட்டுப்பட்டி, செங்குட்டை, எரிசணம்பட்டி, மாரப்பட்டி, நாட்டாமங்கலம் உள்பட பல இடங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் நிலக்கடலையை விற்பனைக்கு கொண்டு வந்தனர். வியாபாரிகள் அதிக விலை கொடுத்து நிலக்கடலையை வாங்கினர்.
நிலக்கடலை விவசாயிகள் கூறியதாவது:
செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிலக்கடலைக்கு சீஸன். கடந்தாண்டு நிலக்கடலைக்கு அதிகளவு விலை கிடைத்தது. தற்போது, இரண்டாவது சீஸன் ஆரம்பித்து ஒரு மாதமாகிறது. கடந்த ஃபிப்ரவரி, 12ம் தேதி, 60 கிலோ நிலக்கடலை மூட்டை அதிகபட்சமாக, 1,689 ரூபாய்க்கு விற்பனையானது. 19ம் தேதி நடந்த ஏலத்தில், 60 கிலோ மூட்டை, 1,822 ரூபாய்க்கு விற்பனையானது. 26ம் தேதி நடந்த ஏலத்தில், 60 கிலோ மூட்டை, 1,891 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், 60 கிலோ மூட்டை, 2,005 ரூபாய்க்கு விற்பனையானது.
கடந்த ஃபிப்ரவரி மாதத்தை காட்டிலும், ஒரு மூட்டைக்கு, 316 ரூபாய் கூடுதலாக விலை கிடைத்துள்ளது. இரண்டாவது சீஸன் மேலும் ஒரு மாதம் நீடிக்கும். சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து நேற்று, 250 மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர். நேற்று குறைந்தளவே வரத்து காணப்பட்டது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 473 மூட்டை மஞ்சள் குவிப்பு ரூ.25 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 473 மூட்டை மஞ்சள், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.
ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. அதில் 18 தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் சாகுபடி செய்துள்ள மஞ்சளை அறுவடை செய்து ஏலத்தில் பங்கேற்கின்றனர்.
பல்வேறு மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில் தலா, 65 கிலோ கொண்ட, 473 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.
அதில், விரலி ரகம் அதிகபட்சம் ஒருமூட்டை, 7,819க்கும், குறைந்தபட்சம், 6,519 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதே போல் குண்டு ரகம் அதிகபட்சம், 6,919, குறைந்தபட்சம், 5,319 ரூபாய்க்கு ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிக பட்சம் 16 ஆயிரத்து, 899, குறைந்தபட்சம், 12 ஆயிரத்து,

690 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## டெல்டா மாவட்டங்களில் இருந்து நெல் அரவைக்கு வருகை

தர்மபுரி: டெல்டா மாவட்டத்தில் இருந்து தர்மபுரிக்கு ரயிலில் கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகள் அரவைக்காக, ரைஸ் மில்களுக்கு, லாரியின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் சம்பா அறுவடை முடிந்துள்ளது. அதை அடுத்த பல்வேறு மாவட்டங்களில் உள்ள, தமிழ்நாடு கூட்டுறவு வாணிப கழகத்துக்கு ரயில் மூலம் நெல் மூட்டைகள் அனுப்பப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் இருந்து தர்மபுரி மாவட்ட, தமிழ்நாடு வாணிப கழகத்துக்கு, ரயில் மூலம், 2 ஆயிரத்து, 300 டன் நெல் மூட்டைகள், 56 பெட்டிகள் மூலம் அனுப்பப்பட்டது. தர்மபுரி ரயில்வே ஸ்டேஷனுக்கு நேற்று மதியம், ஒரு மணியளவில் வந்த சரக்கு ரயிலில் இருந்து, தமிழ்நாடு வாணிப கழக அலுவலர்களின் உத்தரவின் பேரில், உதவி தர ஆய்வாளர் சந்திரஹாசன், தரக்கட்டுப்பாட்டு உதவி மேலாளர் நித்தியானந்தம் ஆகியோர், அரவை செய்ய, அங்கீகரிக்கப்பட்ட அரவை மில்களுக்கு, நெல் மூட்டைகளை, லாரியில் ஏற்றி அனுப்பி வைத்தனர். "அரைவை மில்களில் அரவை செய்யப்படும் நெல் மூட்டைகளை, தர்மபுரியில் உள்ள தமிழ்நாடு வாணிப கழகத்துக்கு கொண்டு, செல்லப்பட்டு, அங்கிருந்து, பொது வினியோக திட்டத்திற்கு அனுப்படும்' என, அலுவலர்கள் தெரிவித்தனர்.

## கால்நடை தீவன சாகுபடி: விவசாயிகளுக்கு பயிற்சி

தர்மபுரி: நல்லம்பள்ளி யூனியனுக்கு உட்பட்ட, தடங்கம் பஞ்சாயத்தில், வேளாண் துறை அட்மா திட்டம் மற்றும் குண்டலப்பட்டி கால்நடை ஆராய்ச்சி நிலையம் சார்பில் பண்ணைப்பள்ளியில், கால்நடை தீவன சாகுபடி குறித்து பயிற்சி வகுப்பு நடந்தது. கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் வணங்காமுடி, கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மீனலோசினி, கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் இளங்கோவன், வேளாண் துணை இயக்குனர் மேகநாதன், வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை, செட்டிக்கரை கால்நடை மருத்துவர் சரவணன், அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுமதி, தொழில் நுட்ப வல்லுனார் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகள் அளித்தனர். "அசோலா உற்பத்தி செய்து கறவை மாடுகளுக்கு அளித்தல், பால் உற்பத்தியை பெருக்குதல், சொந்த கலப்பு தீவனம் தயாரித்தல், கறவை மாடுகள் பால் உற்பத்தி பெருக்குதல், குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம், வேலி மசால், கம்பு, இனிப்பு சோளம், தீவன உற்பத்தி செய்து, பால் உற்பத்தியை பெருக்குதல்' குறித்து விளக்கப்பட்டது. * நல்லம்பள்ளி யூனியனுக்கு உட்பட்ட ராமர்கூடல் கிராமத்தில், சொந்தில்குமார் என்ற விவசாயி வாயில் நடந்த பண்ணை பள்ளி கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் வணங்காமுடி தலைமை வகித்தார். கால்நடை

பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் மீனலோசினி, அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப அலுவலர் சுமதி, கார்த்திகேயன், ராஜதுரை ஆகியோர் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்து, தீவன உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி பெருக்கம் குறித்து அறிவுரைகள் வழங்கினர்.

## பன்னீர் கரும்பு நடவு பணிகள் சுறுசுறுப்பு

பென்னாகரம்: பென்னாகரம் பகுதியில், பொங்கல் பண்டிகைக்காக, பன்னீர் கரும்பு நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் சாகுபடி அதிக ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. கரும்பு சாகுபடியை பொறுத்த வரையில், மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு மற்றும் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் முன் பதிவு செய்து விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டாய் ஆலை அரவைக்கு பணிக்கு பதிவு செய்யப்படும் கரும்புகள் வெட்ட அதிக நாட்கள் ஆவதால், கரும்பின் பிழி திறன் குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால், கடந்த காலங்களை விட விவசாயிகள் கரும்பு சாகுபடியில் வெல்லம் தயாரிப்பு, தனியார் சர்க்கரை ஆலை மற்றும் பொங்கல் பண்டிகை காலங்களில் விற்பனை செய்யப்படும் பன்னீர் கரும்புகளை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். பன்னீர் கரும்பை பொறுத்த வரையில், பத்து மாத பயிராகும். இதனால், அடுத்தாண்டு பொங்கல் பண்டிகை விற்பனையை குறி வைத்து, இறவை பாசன பகுதியில் விவசாயிகள் பன்னீர் கரும்புகளை சாகுபடி செய்ய துவங்கி விட்டனர். இங்கு உற்பத்தியாகும் கரும்புகள் பொங்கல் பண்டிகையின் போது, கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதால், கடும் நீர் பற்றாக்குறையுள்ள நிலையிலும், வழக்கம் போல் பன்னீர் கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக பென்னாகரம் தாலுகா பகுதிகளில் விவசாயிகள் பன்னீர் சாகுபடியில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். கரும்பு சாகுபடிக்கு வேளாண் துறை சார்பில் சொட்டு நீர் பாசனத்துக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், மிக காலம் தாழ்த்தி மானியம் கிடைப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

## சில்லரை பணவீக்கம் 10.91 சதவீதமாக உயர்ந்தது



புதுடில்லி:சென்ற பிப்ரவரி மாதத்தில், நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், சில்லரை பணவீக்கம், 10.91 சதவீதமாக அதிகரித்துள்ளது.காய்கறிகள்,

சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்றவற்றின் விலை அதிகரித்து வருவதால், தொடர்ந்து, மூன்றாவது மாதமாக, சில்லரை பணவீக்கம் இரட்டை இலக்க அளவிலேயே உள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**குளிர்பானங்கள்:**நடப்பாண்டு ஜனவரி மாதத்தில், சில்லரை பணவீக்கம், 10.79 சதவீதம் என்ற அளவிலும், இது, கடந்த ஆண்டு, டிசம்பர் மாதத்தில், 10.56 சதவீதமாகவும், நவம்பர் மாதத்தில், 9.90 சதவீதமாகவும் இருந்தது.சென்ற ஜனவரி மாதத்தில், உணவு பொருட்கள், குளிர்பானங்கள் போன்றவற்றின் விலை, 13.73 சதவீதம் அதிகரித்துள்ளது. இவைதவிர, எரிபொருள் விலை, 8.67 சதவீதம் என்ற அளவிலும், துணி வகைகள், காலணிகள் போன்றவற்றின் விலை, 10.91 சதவீதம் என்ற அளவிலும் அதிகரித்திருந்தது.

கணக்கீட்டு மாதத்தில், காய்கறிகள் விலை, 21.29 சதவீதம் என்ற அளவிலும், தானியங்கள் விலை, 17.4 சதவீதம் என்ற அளவிலும் மிகவும் அதிகரித்து காணப்பட்டது.சென்ற ஜனவரி மாதத்தில், முட்டை, இறைச்சி, மீன்கள் போன்றவற்றின் விலை, 15.72 சதவீதம் என்ற அளவிலும், எண்ணெய் மற்றும் கொழுப்பு பொருட்களின் விலை, 14.56 சதவீதம் என்ற அளவிலும் அதிகரித்திருந்தன.

கணக்கீட்டு மாதத்தில், பருப்பு வகைகளின் விலை, 12.39 சதவீதம் என்ற அளவிலும், சர்க்கரையின் விலை, 12.10 சதவீதம் என்ற அளவிலும் அதிகரித்திருந்தன. ஜவுளி மற்றும் காலணிகளின் விலை, 10.87 சதவீதம் என்ற அளவில் உயர்ந்திருந்தது.

**பொது பணவீக்கம்:**சென்ற பிப்ரவரி மாதத்தில், நகர்ப்புறங்களுக்கான சில்லரை பணவீக்கம், 10.84 சதவீதமாக உயர்ந்திருந்தது. இது, ஜனவரி மாதத்தில், 10.73 சதவீதமாக காணப்பட்டது. கிராமப்புறங்களுக்கான பணவீக்கம், சென்ற ஜனவரியில், 10.88 சதவீதமாகவும், இது, பிப்ரவரி மாதத்தில், 11.01 சதவீதமாகவும் அதிகரித்திருந்தது.மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின், பொது பணவீக்கம், கடந்த அக்டோபர் மாதம் முதல் குறைந்து வருகிறது. நடப்பாண்டு ஜனவரியில், பொது பணவீக்கம், 6.62 சதவீதமாக இருந்தது.

## அரிசி, கோதுமைக்கான மானியம் ரூ.80,491 கோடி



புதுடில்லி:நடப்பு 2012 -13ம் நிதியாண்டில், இதுவரையிலுமாக, மத்திய அரசின், அரிசி மற்றும் கோதுமைக்கான மானியச் செலவினம், 80,491 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என, மத்திய உணவு அமைச்சர், கே.வி.தாமஸ், பார்லிமென்டில் தெரிவித்தார். ஏழைகள் மற்றும் வறுமை கோட்டுக்கும் கீழ் உள்ளவர்களுக்கு, பொது வினியோக திட்டத்தின் கீழ், அரிசி, கோதுமை ஆகியவை குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில், மத்திய அரசு, இதுவரை, 80,491 கோடி ரூபாயை மானியமாக வழங்கியுள்ளது. இது, கடந்த நிதியாண்டின், இதே காலத்தில், 74,903 கோடி ரூபாயாக இருந்தது. சென்ற 6ம் தேதி வரையிலுமாக, அரிசிக்காக வழங்கப்பட்ட மானியம், 36,540 கோடி ரூபாயாகவும், கோதுமைக்கான மானியம், 43,951 கோடி ரூபாயாகவும் உள்ளது. இது, கடந்த நிதியாண்டில் முறையே, 49,041 கோடி ரூபாய் மற்றும் 25,862 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.மத்திய, மாநில அரசுகள், ரேஷன் கடைகள் வாயிலாக, அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்களை, குறைந்த விலையில் வழங்குகின்றன என, அமைச்சர் மேலும் கூறினார்.

விவசாய மலர்

## இலைகளின் மூலம் செடி உற்பத்தி



பொதுவாக செடிகள் விதைகள், கட்டிங்குகள், ஒட்டுக்கட்டுதல் மற்றும் திசுவளர்ப்பு ஆகிய முறைகளிலேயே உருவாக்கப்படுகிறது. இதில் "திசு வளர்ப்பு' முறை மிகவும் அதிக பொருட்செலவை உள்ளடக்கியது. ஆனால் தரத்தில் உயர்ந்த தொழில் நுட்பத்தைக் கொண்டது. எங்களின் இந்தத் தொழில்நுட்பம் தரத்தில் திசுவளர்ப்பு முறைக்கு இணையானது. ஆனால் இதற்கு அதிக பொருட்செலவு தேவையில்லை. ஒரு செடியில் உள்ள இலைகளைக் கொண்டே அதன் செடிகளை ஜெராக்ஸ் போல உற்பத்தி செய்யலாம். தரமான தாய் செடிகளில் இருந்து இலைகள் மூலம் செடிகளை உற்பத்தி செய்யும்போது அதன் தரம் உறுதி செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் மிகவும் தரமான, விளைச்சல் உறுதி செய்யப்பட்ட நாற்றுக்கள் கிடைக்கும்.

தற்போது சத்தியமங்கலம் பகுதியில் அதிகமாக பயிரிடப்படும் குண்டுமல்லியும், திருச்சி பகுதியில்

அதிகமாக சாகுபடி செய்யப்படும் இட்லிப்பூ நாற்றுக்களும் இலைகளைக் கொண்டு செடிகளை உற்பத்தி செய்யும் இந்த முறையில் சாத்தியமாகி இருக்கிறது. மற்ற செடிவகைகளை இந்த முறையில் உற்பத்தி செய்யும் எங்களின் முயற்சி தொடரும். 1998ல் இருந்து எங்கள் நர்சரி, நாற்று உற்பத்தித் தொழிலில் உள்ளது. தரமான, விளைச்சல் உறுதி செய்யப் பட்ட நாற்றுக்களை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். ஏனெனில் நானும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்தான். விவசாயமே எங்கள் பரம்பரைத் தொழில். 2011ம் ஆண்டில், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் எனக்கு "சிறந்த விவசாயி' விருதை வழங்கியது. டிஎன்ஏயுவின் அக்ரி பிசினஸ் இன்குபேட்டரில் எங்கள் நர்சரி நிறுவனம் உறுப்பினராகவும் பதிவுபெற்றது.

**-எஸ்.ராஜரத்தினம், பி.எப்.டெக் (அக்ரி), மேட்டுப்பாளையம்-641 301.**

## முட்டை உற்பத்தியில் அதிக லாபம் பெற

தினமும் ஒரு மிலி அளவு கோ அர்க் (பசுநீர் வடித்தது) கோழிக் குஞ்சுகளுக்கு உள்ளுக்குக் கொடுத்துவந்தால் அவற்றின் எடை அதிகரிக்கும். நோய்கள் வராமல் ஆரோக்கியமாக இருக்கும். அவற்றின் முட்டைகளின் அளவு, எடை, ஓட்டின் பருமன், வெள்ளை மற்றும் மஞ்சள் கருவின் அளவு அதிகரிக்கும். இதனால் உற்பத்தியாளர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும்.

## சின்னச்சின்ன செய்திகள்



**வரகு:**

தமிழகத்தில் வரகு 5871 எக்டரில் பயிரிடப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் 1034 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப் படுகிறது. வறட்சி தாண்டவமாடும் காலங்களில் பசியைப் போக்கும் பொருளாக வரகு இருந்துவந்துள்ளது. வரகில் 300 கிலோ கலோரி ஆற்றல், ஈரப்பதம் 1 கிராம், புரதம் 8 கிராம், கொழுப்பு 9 கிராம், தாது உப்புக்கள் 3 கிராம், கார்போஹைட்ரேட் 9 கிராம், நார்ச்சத்துக்கள் 66 கிராம், கால்சியம் 27 மில்லிகிராம், பாஸ்பரஸ் 188 மில்லிகிராம் போன்ற சிறிய ஊட்டச்சத்துக்களும் அமினோ அமிலங்களும் நிறைந்துள்ளன. நம் முன்னோர்கள் இரவில் வரகு சாப்பாடும், பகலில்

நாட்டுச்சோளம் சாப்பிட்டு வந்துள்ளனர். இதனால் தேக ஆரோக்கியத்துடனும் சர்க்கரை, காசநோய், நரம்புத்தளர்ச்சி உள்ளிட்ட நோய்கள் இல்லாமல் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியுடன் வாழ்ந்துவந்தனர்.

**வரகு உணவின் மருத்துவ குணங்கள்:** நம் முன்னோர்கள் தங்களுடைய உணவில் அதிக அளவு தானிய வகைகளைச் சேர்த்து வந்தனர். சிலர் அரிசியைப் பயன்படுத்துவது போல் வேகவைத்து வடித்து சாப்பிட்டனர். இது உடல் எடையைக் குறைக்கக்கூடியது. மாதவிடாய் கோளாறு கொண்ட பெண்கள் வரகைச் சமைத்து சாப்பிடுவது நல்லது. உடலில் ஏற்படும் வீக்கம், நுரையீரலில் ஏற்படும் நோய்கள், வயிற்றுப்போக்கு ஆகியவற்றைக் குணப் படுத்தக்கூடியது. வரகை உண்பதால் உடலை சீராக வைத்துக் கொள்ளலாம். கண் நரம்புகளுக்கு புத்துணர்வு கொடுத்து பார்வையைத் தெளிவாக்கும். இதயத்தை வலுவாக்கும். உடலில் தேவைற்ற நீரை வெளியேற்றும். நீரிழிவு நோய் என்ற சர்க்கரை நோயைக் குணப்படுத்தும்.

**பொருட்கள்:** வரகிலிருந்து பிஸ்கட், முறுக்கு, கேக், சத்துமாவு போன்ற பலவகை உணவு தயாரிக்கப்படுகிறது.

**பேரிக்காய்:**

குளிர்பிரதேச தோட்டக்கலைப்பயிர்களில் பேரி வியாபார ரீதியில் சாகுபடி செய்யப்பட்டு வரும் ஒரு முக்கிய பயிர். கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் ஆப்பிளுக்கு அடுத்தபடியாக அனைத்து விவசாயிகளாலும் பணப்பயிராக சாகுபடி செய்யப்படுகிறது.
பேரி இந்தியாவில் உத்தரப்பிரதேசம் மாநிலத்திலுள்ள குலு, சிம்லா, குமாயோன் மலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது இமாச்சலபிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், உத்திராஞ்சல், மணிப்பூர், தமிழ்நாடு, அருணாசலபிரதேசம், நாகாலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்களில் பணப்பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தில் நீலகிரி, மேல்பழநி மற்றும் கீழ்பழநி மலையில் சுமார் 2150 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டுக்கு 34,400 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

**ரகங்கள்:** பார்ட்லெட் (அரவில்லியம் பேரி), பர்கீபர், (சர்க்கரை பேரி), நியூ பியர் (தண்ணீர் பேரி), கண்ரி பியர் (நாட்டுப்பேரி), கீபர் (ஊட்டி பேரி); மேலும் விபரங்களுக்கு: முனைவர் ஜே.ராஜாங்கம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல்-625 103. போன்: 04542-240 931.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் (NADP / RKYYG):**

1. துல்லிய பண்ணைத்திட்டம்: சொட்டு நீர் பாசன அமைப்பு நிறுவுதல், நீரில் கரையும் உரங்கள் - TANHODA மானியம் மானிய விலையில்உரங்கள்.
2. திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம் அமைத்தல் - 1 ஏக்கர் செயல் விளக்கம் மானியம்

ரூ.3000/-, இடுபொருள் மானியம் ரூ.800, கோனோவீடர் மார்க்கர் கருவிகளுக்கு மானியம் ரூ.2,200/-.

3. மானிய விலையில் ஜிங்க் சல்பேட் விநியோகம் - 50 சத மானியம், அதிக பட்சமாக எக்டருக்கு ரூ.425/-.

4. பயறுவகை பயிர்களுக்கு எக்டருக்கு மானியம் ரூ.250/-. டி.ஏ.பி. கரைசல் தெளித்தல்

5. நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் விநியோகம் - எக்டருக்கு மானியம் ரூ.750/-.

6. தீவிர துவரை சாகுபடி செயல்விளக்கம் - எக்டருக்கு ரூபாய் 5000/- இடுபொருள் மானியம்.

7. பயறுவகை விதை உற்பத்தி மானியம் - பயறுவகை சான்று விதை உற்பத்தி மானியம் கிலோவிற்கு ரூ.15 வீதம்.

8. பயறுவகை விதை விநியோக மானியம் - பயறுவகை சான்று விதை விநியோகம் மானியம் கிலோவிற்கு ரூ.8 வீதம்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## தென்னை குருத்தழுகல் நோய்

ஒரு வகைப் பூசணத்தால் வரும் குருத்தழுகல் நோய் தமிழகத்தில் உள்ள தென்னை மரங்களைத் தாக்கும் கொடிய நோய் ஆகும். இன்று தமிழக தோப்புகளில் பல பண்ணைகள் நீர் குறைந்ததாலும் காண்டாமிருக வண்டுகள் தாக்குதலாலும் குருத்தழுகல் நோயாலும் அழிந்து வருகின்றன. பல விவசாயிகள் இந்நோய் தாக்கிய மரங்களைப் பராமரிப்பதை நிறுத்திவிடுகின்றனர். இளம் வயது மரங்களை இந்நோய் அதிகம் பாதிக்கிறது. முதலில் இந்தப் பூசணம் தென்னையின் குருத்துப் பகுதியைத் தாக்குகிறது. பூசணத்தின் விதைகள் போன்ற ஸ்போர்கள் குருத்துப்பகுதியில் விழுந்ததும் முளைத்து பூசண இலைகளை வளரச் செய்து குருத்தில் பரவுகிறது. இதன் இழைகளும் விதைகளும் தாக்கப்பட்ட பகுதிகளில் பல மாதங்கள் வரை உயிருடன் இருக்கும். இந்த விதைகளும் இழைகளும் பலவித பூச்சிகள் மூலம் வேறு தென்னை மரங்களுக்கும் பரவும். தாக்கப்பட்ட மரங்களில் முதலில் ஒரு சில இளம் ஓலைகள், அதுவும் நடுப்பகுதியில் உள்ளவை மஞ்சள் நிறம் அடையும். இலைகளின் அடி மட்டைகள் எளிதில் அழுகி வலுவிழக்கும். கையால் பிடித்து இழுத்தால் பிரிந்து வந்துவிடும்.
பின் சுற்றியுள்ள இலைகளுக்கும் நோய் பரவிவிடும். இந்த இலைகளில் சிறு பள்ளங்கள் கொண்ட புள்ளிகள் தோன்றும். குருத்து அழுகியதும் ஒருவித துர்வாசனை தோன்றும். ஒரு வாரத்தில் குருத்தை அழுகச் செய்துவிடும். குருத்து தோன்றும் வளர்ச்சிப்பகுதி அழிக்கப்பட்டு மரமே வாடிவிடும்.

வெப்பம் குறைந்த காலங்களிலும் மழைக்காலங்களிலும் இந்நோய் அதிகம் தாக்குகிறது. இதனைத் தவிர்க்க எந்த மரத்திலாவது இளம் இலைகள் மஞ்சளாகத் தொடங்கியதுமே குருத்து அழுகல் நோய் வந்துள்ளதா என மரத்தில் ஏறி பார்க்க வேண்டும். அப்படி ஆரம்பித்திருந்தால் அழுகிய பகுதியை நீக்கவிட்டு நீக்கிய பகுதியில் திமில் போர்ட்டோ பசையை தட வேண்டும். பாதிக்கப்பட்ட இலைகளை பிரித்து எடுத்துவிட்டு, இலைகள் ஒட்டியிருந்த பகுதியிலும் போர்ட்டோ பசையைத் தடவ வேண்டும்.

மற்ற இலைகள் நன்கு நனையும்படி போர்ட்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். பண்ணையில் உ"ளள இதர மரங்களுக்கும் போர்ட்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். போர்ட்டோ கலவை தயாரிக்க முடியாவிட்டால் காப்பர் ஆக்சி குளோரைடு (புளூ காப்பர் - பைடொவான் போன்றவை) மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 3 கிராம் மருந்து என்ற வீதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தை ஈரமாக்கி பச்சையாகவும், போர்ட்டோ கலவைக்குப் பதிலாக குருத்திலும் இலை பிரிந்த இடத்திலும் தடவலாம்.

மரத்தில் ஏறி மருந்தைத் தடவ முடியாத நிலை இருந்தால் வேர்மூலம் மருந்தைச் செலுத்தி ஓரளவு கட்டுப் படுத்தலாம். நோய் ஆரம்ப நிலையில் இருக்கும் மரங்களிலும் நோய் இன்னும் பரவாமல் இருக்கும் மரங்களிலும் இதனைப் பயன்படுத்தி நோய் வருமுன் காப்பதையும் செய்யலாம். தென்னை மரத்தின் வேர்ப்பகுதியில் மண்ணை வெட்டி, நல்ல ஆரோக்கியமான பழுப்பு நிறமுள்ள பென்சில் தடிமனுள்ள ஒரு வேரைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வேரை கீழ்ப்பகுதியில் வெட்ட வேண்டும். பின் மரத்துடன் இணைந்திருக்கும் வேரை மருந்து கலந்த நீரில் நுழைத்து வைக்க வேண்டும். இதற்கு ஒரு பாலிதீன் பையில் 25 மிலி தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் 15 கிராம் கார்பன்டசிம் அல்லது டிரைடிமார் 15 மி.லி என்ற அளவு நோய் மருந்தில் ஒன்றை கலக்கிக் கொள்ள வேண்டும்.

பாலிதீன் பைக்குள் அந்த வேரை நுழைத்து வேரின் வெட்டிய முனை, மருந்துக்கலவையின் அடிப்பகுதியை தொடும்படி வைத்து கட்டிவிட வேண்டும். பாலிதீன் பையின் வாய் வழியாக மருந்துக்கலவை கொட்டாமல் இருக்கும்படி இணைத்துக் கட்டிவிட வேண்டும். அதன்பின் அந்த மருந்துப் பையோடு வேரை மண்ணிற்குள் வைத்து மண் போட்டு மூடிவிட வேண்டும். மருந்து வைத்த 24 மணி நேரத்திற்குப் பின் மண்ணைத் தோண்டி அந்த மருந்து முழுவதும் வேரால் உறிஞ்சப்பட்டுவிட்டதா என பார்க்க வேண்டும். உறிஞ்சப்படாமல் இருந்தால் வேறு ஒரு நல்ல வேரைத் தேர்ந்தெடுத்து மீண்டும் மருந்துக்கலவையைக் கட்ட வேண்டும். 10 அல்லது 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை வேர் மூலம் மேலே கூறிய மருந்துகளில் ஒன்றை மாற்றி மற்றொன்றினைக் கொடுக்க வேண்டும். குருத்தழுகல் நோய் சரிவரக் கட்டுப்படாவிட்டால்

விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை அல்லது வேளாணண்மைப் பல்கலைக்கழகம், தென்னை வளர்ச்சி வாரிய நிபுணர்களைக் கலந்து, அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

**எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர்.**

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

13.03.2013 A.M

---

## போச்சம்பள்ளி அருகே தென்னை மரம் ஏற பயிற்சி 200 தொழிலாளர்கள் பங்கேற்பு

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி அருகே அரசம்பட்டியில் தென்னை மரம் ஏற 200 தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. காவேரிப்பட்டணம் ஒன்றியம் அரசம்பட்டியில், கிருஷ்ணகிரி பெண்கள் உரிமைகள் மற்றும் சென்னை தென்னை வளர்ச்சி வாரியமும் இணைந்து நடத்தும் தென்னை மரம் ஏறும் பயிற்சி முகாம் துவங்கியது. தென்னை வளர்ச்சி வாரியம் பிரபாகரன் தலைமை தாங்கினார். முகாமில், திண்டுகல் காந்தி கிராம பல்கலைக்கழக தேவராஜ், அறக்கட்டளை இயக்குனர் சொக்கலிங்கம், குப்புசாமி, ஒருங்கிணைப்பாளர் ஜகஹர் ஆகியோர் தென்னை பற்றியும், நோய் தாக்குதல் குறித்தும் விரிவாக எடுத்து கூறினர். இந்த முகாமில், சுற்று வட்டார பகுதியை சேர்ந்த 200 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். மேலும் முகாமின் போது தொழிலாளர்களுக்கு ரூ. 4 ஆயிரம் மதிப்பிலான மரம் ஏறும் கருவி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த பயிற்சி வரும் 30 தேதி வரை நடைபெறுகிறது. ஒவ்வொருவருக்கும் 6 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும் என்றும், இந்த பயிற்சியில் தொழிலாளர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் நிர்வாகிகள் கூறினர்.

## அதிக மகசூல் பெற சூரியகாந்தி சாகுபடி சிறந்தது வேளாண் அதிகாரி தகவல்

கடலூர், :கடலூர் வட்டாரத்தில் அதிக மகசூல் பெற சூரியகாந்தி சாகுபடி சிறந்தது என்று கடலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயந்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,கடலூர் வட்டாரத்தில் சூரியகாந்தி பயிர் அதிக அள வில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரில் உயர் விளைச்சல் தரக்கூடிய ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்து பயன்பெறலாம். இதன்படி மஞ்சாநாயக்ன்பட்டி, சிந்தாமணிபட்டி மற்றும் பல கிராமங்களில் விவசாயிகள் உயர் விளைச்சல் ரககங்களை சாகுபடி செய்ய மல் அவர்கள் வசம் உள்ள விதைகளை பயன்படுத்துவதால் மகசூல் குறைந்த அளவு காணப்படுகிறது. பூக்களின் அளவு சிறிதாக உள்ளது.

எனவே உயர் விளைச் சல் ரகங்களை பயன்படுத்தலாம்.மேலும் சூரியகாந்தி பயிரில் அயல் மகரந்த சேர்க்கை அதிகப்படுத்த வேண்டும். தேன்கூடு பெட்டிகளை வைத்து தேனீக்கள் மூலம் அதிக மகரந்த சேர்க்கை உண்டாக்கி அதிக மகசூலையும் பெறலாம். மேலும் காலை 7 மணி முதல் 9 மணி வரை மெல்லிய துணியை கொண்டு பூக்களை ஒன்றுடன் ஒன்று ஒத்தி எடுத்தால் பூக்களின் மகரந்த சேர்க்கையை அதிகப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

## 60 நாட்களில் அறுவடை செய்யலாம் தீவன பயிர் வளர்க்க 50 சதவீதம் மானியம் காய்ந்த தீவனம் ரூ.10க்கு எடுத்து கொள்ள வாய்ப்பு

கரூர், :60 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய தீவன பயிர் வளர்க்க ரூ.50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. காய்ந்த தீவனம் ரூ.10க்கு எடுத்து கொள்ள வாய்ப்புள்ளது இதுகுறித்து குறித்து கரூர் கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

கரூர் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு தமிழக அரசு, இந்த பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் தீவன பயிர் உற்பத்தி செய்யும் (மானியத்துடன்) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, கரூர் மாவட்டத்தில் 700 ஏக்கர் நிலத்தில் மானாவாரி தீவன சோளம் (எம்பி சாரி-தீவன சோளம்) மிக குறைந்த காலத்தில் (60 நாட்களில்) உற்பத்தி செய்யப்பட உள்ள தீவன விதை கள் கால்நடை பராமரிப்பு துறை மூலம் வழங்கப்பவுள்ளது. ஒரு ஏக்கருக்கு மேல் எவ்வளவு பரப்பளவிலும் பயிர் செய்யலாம். ஒரு ஏக்கரில் குறைந்தபட்சம் 10 டன் தீவன பயிர் சாகுபடி செய்ய இயலும். ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய ரூ.13.600 உத்தேச செலவு கணக்கீட்டு அதில் 50 சதவீதம் (ரூ.6800) மானியமாக வழங்கப்பட உள்ளன. மேலும் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யும் தீவனப் பயிர்கள் பசுந்தீவனமாக இருப்பின் கிலோ ரூ.2 என்ற விலையிலும், காய்ந்த தீவனமாக இருந்தால் கிலோ ரூ.10 என்ற விலையிலும் அல்லது அப்பகுதி சந்தை நிலவரப்படி அருகில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள் முதல் செய்து தேவைப்படும் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படும். பசுந்தீவன உற்பத்தி திட்டத்தின் கீழ் பல்லாண்டு பயிர் ரகங்கள் கோ-3, கோ-4 தீவன பயிர் ரகங்கள் சாகுபடி செய்ய 526 ஏக்கருக்கு மானியம் வழங்கப்படவுள்ளது. இதில், உத்தேச சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு ரூ.12,000 என மதிப்பீட்டு முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 1 ஏக்கருக்கு வழங்கப்படும்.

இறவை பாசன வசதியுள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் இந்த திட்டத்தின் மூலம் அரசு மானியத்தை பயன்படுத்தி கொள்ள மார்ச் 15ம் தேதிக்குள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் தங்கள் பெயர், நிலம் சம்பந்தப்பட்ட விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம். முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதால் உடன் இந்த திட்டத்தில் சேர்ந்து பயனடைய வேண்டும்.
இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

## அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டு 3.5 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம், அரூரில் உள்ள சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2012-13ஆம் அரவைப் பருவத்தில் 3.5 லட்சம் மெட்ரிக் டன் கரும்புகள் அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஆலையின் தனி அலுவலர் சாம்பசிவம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: ஆலையின் நடப்பு பருவத்துக்கு 3.50 லட்சம் மெட்ரிக் டன் கரும்புகளை அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 2.51 லட்சம் மெட்ரிக் டன் கரும்புகள் அரவை செய்யப்பட்டுள்ளன. கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு, டன்னுக்கு ரூ.2,429 விலை வழங்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக, புதிதாக கரும்பு நடவு செய்யும் பணி குறைய வாய்ப்புள்ளது. எனவே, இதை ஈடுகட்ட புதிய விவசாயிகளை அணுகி கரும்பு நடவு செய்யும் பணியை ஆலை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. அடுத்த பருவத்துக்கான கரும்புகளை அறுவடை செய்ய வேண்டுமெனில், வறட்சியால் சிரமம் ஏற்படும் சூழல் உள்ளது. மழையளவும் குறைந்துவிட்டதால், இருக்கிற நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் கரும்புகளை நடவு செய்து ஆலைகளில் பதிவு செய்ய வேண்டும். சுப்பிரமணிய சிவா ஆலைக்கு கரும்பு பதிவு செய்தல், பயிர்க் கடன் பெறுதல், வெட்டு உத்தரவு பெறுதல் உள்ளிட்டவை தொடர்பாக சிரமம் ஏற்பட்டாலோ, பிரச்னைகள் இருந்தாலோ, தனி அலுவலரை 9442507611 என்ற செல்போனிலும், கரும்பு பெருக்கு அலுவலரை 9442591234 என்ற செல்போனிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## யானைகளால் ஏற்பட்ட பயிர் சேதத்தை ஆர்டிஓ ஆய்வு

பாப்பிரெட்டிப்பட்டி, : தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் நுழைந்த யானைகள், கடந்த சில நாட்களாக அங்குள்ள ராகி, கரும்பு, நெல் போன்ற பயிர்களை நாசம் செய்து

வருகின்றன. யானைகளால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் அரூர் வருவாய் கோட்டாட்சியர் காமராசர் நேற்று யானைகளால் சேதமடைந்த பயிர்களை பார்வையிட்டார். இதையொ ட்டி கோம்பூர், மஞ்சவாடி, அலமேலுபுரம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்ற அவர், யானை களால் ஏற்பட்ட பயிர்ச்சேதம் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் குணசேகரன், வருவாய் ஆய்வாளர் அசோக்குமார், கிராம நிர்வாக அலுவலர்கள் வீரமணி, விமல், குமரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## பால் உற்பத்தியை அதிகரிக்க இடுபொருட்கள் வழங்கல்

பென்னாகரம், : அட்மா திட்டத்தின்கீழ், பென்னாகரம் வட்டார விவசாயிகளுக்கு கால்நடை துறை சார்பாக குறைந்த செலவில், தரமான பால் உற்பத்தி அதிகரிக்க ஊட்டச்சத்து இடுபொருட்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு பென்னாகரம் உதவி வேளாண்மை இயக்குனர் கணேசன் தலைமை வகித்தார். இதில் குண்டலஅள்ளி கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர் பேராசிரியர் மீனலோசனி கலந்து கொண்டு, தரமான பால் உற்பத்திக்கான வழிமுறைகள் குறித்து விளக்கம் அளித்தார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சரவணன் செய்திருந்தார்.

## சொட்டுநீர் பாசனத்தில் மானியத்துடன் மல்பெரி செடி வளர்க்க அழைப்பு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் குறைந்த தண்ணீர் வசதியில், மல்பெரி செடி வளர்த்து விவசாயிகள் பயனடைய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2003ம் ஆண்டுக்கு பின், போதிய பருவமழை பெய்யவில்லை. இதனால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டதுடன், வருவாய் இழப்பும் அடைந்துள்ளனர். குறிப்பாக, மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பணப்பயிர்களான, கரும்பு, மஞ்சள், வாழை மற்றும் பூ செடிகள் சாகுபடி செய்தவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியிலும் மல்பெரி சாகுபடி, விவசாயிகளுக்கு அதிக வருவாயை தரக்கூடிய ஒன்றாக உள்ளது. மல்பெரி, புது நடவு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு 6,750 வீதம் அதிகபட்சமாக ரூ.16 ஆயிரத்து 875 வழங்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வீதம், அதிகபட்சமாக 2.50 ஏக்கருக்கு ரூ.5 லட்சம் மற்றும் பிற விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15

ஆயிரம் வீதம், அதிகபட்சமாக 2.50 ஏக்கருக்கு ரூ.37 ஆயிரத்து500 மானியமாக வழங்கப்படுகிறது. 700 சதுர அடியில் பட்டுப்புழு மனை அமைக்க, ரூ.37 ஆயிரத்து 500, ஆயிரம் முதல் 1,500 சதுர அடியில் மனை அமைக்க ரூ.75 ஆயிரம், 1,500 சதுர அடிக்கு மேல் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூ.1 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், பட்டுபுழு வளர்க்க விவசாயிகளுக்கு ரூ.37ஆயிரத்து 500 மதிப்பிலான, நவீன பட்டுப்புழு வளர்ப்பு தளவாட பொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது. புழு வளர்ப்பு மனை இயற்கை சீற்றத்தால் பாதிப்பு அடையும் போது, அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம், பட்டு புழு வளர்ப்பு செய்யும் விவசாய குடும்பத்தினருக்கு, விபத்து காப்பீட்டாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படுகிறது. பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் குடும்பத்தினருக்கு ஏற்படும் மருத்துவ செலவிற்கு, ஆண்டிற்கு ரூ.20 ஆயிரம் வரை காப்பீட்டு தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து பட்டு விவசாயிகளுக்கும், ஓசூர் பட்டு பயிற்சி நிலையத்தில், 5 நாட்கள் நவீன பட்டுப்புழு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. வறட்சி காலத்தில் விவசாயிகள் குறைந்த நீரில், மானியம் மற்றும் அதிக லாபம் தரும் மல்பெரி செடிகளை வளர்த்து பயன் அடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னை தொழிலை காப்பாற்ற ரேஷனில் தேங்காய் எண்ணெய் விற்க விவசாயிகள் கோரிக்கை

பொள்ளாச்சி, : தென்னை தொழிலை காப்பாற்ற தேங்காய் எண்ணெய்யை ரேஷன் கடைகளில் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுகாவில் பிரதான தொழிலாக தென்னை விவசாயம் உள்ளது. இந்நிலையில் ரேஷன்கடைகயில் பாமாயில் வழங்குவதுபோல், தேங்காய் எண்ணெய்யையும் வினியோகம் செய்ய வேண்டும் என்று தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில், ‘கடந்த ஆண்டில் பருவமழை பொய்த்தால் கடும் வறட்சி நிலவுகிறது. தென்னை மரத்திற்கான இடுபொருட்கள் மற்றும் உரம் ஆகியவற்றின் விலை பல மடங்காக உயர்ந்துள்ளது. ஆனால் தென்னை தேங்காய், கொப்பரை மற்றும் எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இச்சூழ்நிலையில் கடந்த மாதம் மத்திய அரசு கொப்பரையின் கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.52.50ஆக அறிவித்தது. இது தென்னை விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. விவசாயிகள் எதிர்பார்த்தபடி கொப்பரை கிலோவுக்கு ரூ.75கிடைத்தால்தான் பலன் கிடைக்கும். நேபட் நிறுவனம் கொள்முதல் செய்யும் கொப்பரையின்

நஷ்டத்தில் 15சதவீதம் மட்டுமே மததிய அரசு ஏற்றுகொள்ளும் என்ற உத்தரவை மத்திய நிதி அமைச்சர் அறிவித்ததால். நேபட் அதிகாரிகள் கொப்பரை கொள்முதலை தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே மத்திய அரசு இதில் தலையிட்டு கொப்பரை கொள்முதல் விலையை ரூ.75ஆக உயர்த்தி கொள்முதலில் ஏற்படும் நஷ்டத்தை ஏற்கனவே உள்ள நடைமுறையை கடைபிடித்து மத்திய அரசே ஏற்க பரிந்துரை செய்ய வேண்டும்.

மேலும் ரேஷன்கடைகளில் விற்ககூடிய பாமாயிலுக்கு மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குவது போல் ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய்யை விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றனர்.

## வடகாட்டில், விவசாயிகளுக்கு கரும்பில் நாற்றங்கால் அமைத்தல் தொழில்நுட்ப பயிற்சி

வடகாடு,

வடகாட்டில் விவசாயி களுக்கு, கரும்பு நாற்றங் கால் அமைத்தல் பற்றிய தொழில் நுட்பங்கள் குறித்த களப்பயிற்சி நடை பெற்றது.

நாற்றங்கால் அமைத்தல் பயிற்சி

வடகாட்டில், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி ஒரு விதை பரு சீவல்களில் இருந்து நாற்றங்கால் அமைத்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்த களப்பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் வைரவன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

உப தொழில்கள்

இன்றைய சூழலில் வேளா ண்மை மூலமாக குறைந்த அளவு லாபமே கிடைக்கிறது. இதனை ஈடுகட்ட விவசாயிகள் விவசாயம் சார்ந்த உப தொழில்களை செய்ய வேண்டியது அவசியமாகிறது. கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்பமாக நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தில் மிக முக்கியமான கோட்ப £டானது, நாற்று முறையில் கரும்பு நடவு செய்வதாகும். இந்த கரும்பு நாற்றுகளை உற்பத்தி செய்வது, தற்போது ஒரு நல்ல வேளாண்மை சார்ந்த தொழிலாக உருவெடுத் துள்ளது.

அதிக வருமானம்

இதில் ஒரு கரும்பு நாற்று உற்பத்தி செய்ய 85 முதல் 90 பைசா வரை தேவைப்படுகிறது. இதை ரூ.1.25-க்கு விற்பனை செய்வதன் மூலம் ஒரு கரும்பு நாற்றுக்கு லாபமாக 35 முதல் 40 பைசா வரை கிடைக்கிறது. வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் கரும்பு நாற்றுகளை உற்பத்தி செய்ய தொழில் முனைவோரை உருவாக்கியுள்ளது.

இந்த தொழில் மற்ற வேளாண் சார்ந்த தொழில்களைவிட குறைந்த செலவு கொண்டதாகவும் அதிக வருமானம் தருவ தாகவும் இருகின்றது. இது போன்ற வேளாண் சார்ந்த தொழில்கள் செய்யும் போது வேலையில்லா திண்டாட்டம் குறைய வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு அவர் பேசினார்.

செயல் விளக்கம்

இந்த பயிற்சியில் தொழில் நுட்பங்கள் குறித்து வேளா ண்மை அறிவியல் நிலையத் தின் உதவி பேராசிரியை ரேணுகாதேவி விளக்கம் அளித்தார். கரும்பு நாற்று தயாரிப்பு முறைகள் பற்றி செயல் விளக்கம் அளிக்கப் பட்டது. இதில் திரளான விவசாயிகள் கலந்து கொண் டனர்.

## வெயில் தாக்கம் 100 டிகிரியை தாண்ட வாய்ப்பு: கோழிப்பண்ணைகளில் குடிநீரின் வெப்பத்தை கண்காணிக்க வேண்டும் வானிலையில் தகவல்

நாமக்கல்,

அடுத்த 3 நாட்கள் வெயிலின் தாக்கம் 100 டிகிரியை தாண் டும் என்பதால், கோழிப் பண்ணைகளில் குடிநீரின் வெப்பத்தை கண்காணிக்க வேண்டும் என வானிலையில் தெரி விக்கப்பட்டு உள்ளது.

வானிலை அறிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 3 நாட்கள் நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளி யிடப்பட்டு உள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:

அடுத்த 3 நாட்கள் வானம் தெளிவாகவும், மழை அற்றும் காணப்படும். காற்று இன்றும், நாளையும் 3 கி.மீ. வேகத்திலும், நாளை மறுநாள் 4 கி.மீ. வேகத்திலும் தென் கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 100.4 டிகிரியாகவும், குறைந்த பட்சமாக 73.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 74, 78, 77 சதவீதமாகவும், குறைந்த பட்சமாக 20, 20, 22 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

அடுத்த 3 நாட்களுக்கான வானிலையில் பகல் வெப்பம் 100 டிகிரியை தாண்டும் என்பதால், கோழிகளில் வெப்ப அயற்சி இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே பிற்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை தண்ணீரின் அளவும், அதன் வெப்பமும் கண்காணிக்கப்பட்டு வர வேண்டும்.

கோழிகளின் குடிநீர், குழாயின் வழியாக பண்ணை யின் இறுதிவரை செல்லும் போது, அதன் வெப்பம் உயராமல் இருக்குமாறு அவ்வப்போது நீரை வெளியேற்ற வேண்டும். இதனால் கோழிகளின் வெப்ப அயற்சியை குறைக்க முடியும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## போச்சம்பள்ளி அருகே விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி

மத்தூர்,

போச்சம்பள்ளி அருகே உள்ள அரசம்பட்டியில் விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 200 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

### தென்னை மரம் ஏறும் பயிற்சி

கிருஷ்ணகிரி பெண்கள் உரிமைகள் மற்றும் சென்னை தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் கிருஷ்ணகிரி மாவட் டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் அரசம்பட்டியில் தென்னை மரம் ஏறும் பயிற்சி நடந்து வருகிறது. இதன் தொடக்க நிகழ்ச்சிக்கு தென்னை வளர்ச்சி வாரியம் பிரபாகரன் தலைமை தாங்கி னார். திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக தேவ ராஜ் அறக்கட்டளை இயக்கு னர் சொக்கலிங்கம், குப்புசாமி, ஒருங்கிணைப்பாளர் ஜவஹர் ஆகியோர் தென்னை பற்றியும், நோய் தாக்குதல் பற்றியும் விளக்கிக் கூறினர். இதில் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களில் இருந்து 200க்கும் மேற்பட்ட விவசாயி கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மரம் ஏறும் கருவியை பயன்படுத்தி தென்னை மரம் ஏறுவது குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது.

### மரம் ஏறும் கருவி

மேலும் இந்த விவசாயி களுக்கு ரூ.4 ஆயிரம் மதிப் பிலான மரம் ஏறும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த பயிற்சி வருகிற 30ந் தேதி வரை நடக்கிறது. இதில் கலந்து கொள்பவர்களுக்கு 6 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும் என்று கிருஷ்ணகிரி பெண்கள் உரிமைகள் மற்றும் சென்னை தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள் தெரிவித்தனர்.